# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீட்டு எண் : 44/2020 நாள்:06.11.2020

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளின் நடைமுறைகளில் பல்வேறு மாற்றங்களை அறிமுகம் செய்து செயல்படுத்தி வருகிறது. ஏற்கனவே தேர்வாணையத்தின் 7/2/2020 நாளிட்ட செய்தி வெளியீட்டு எண் 8/2020-ல் அறிவிக்கப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது நிரந்தரப்பதிவுடன் (ONE TIME REGISTRATION) தங்களது ஆதார் எண்ணை இணைக்க வேண்டும். ஒரு ஆதார் எண்ணை ஒரு நிரந்தரப்பதிவிற்கு மட்டுமே பயன்படுத்த முடியும். மேலும், ஆதார் சட்டம் 2016-ன்படி விண்ணப்பதாரர்களின் ஆதார் குறித்த விவரங்கள் தேர்வாணையத்தால் சேமிக்கப்படமாட்டாது. மேலும் ஆதார் எண்ணை விண்ணப்பதாரரின் நிரந்தரப்பதிவில் (OTR) இணைப்பதற்கான வழிமுறைகள், அறிவுரைகள் மற்றும் உறுதிமொழி குறித்தான விவரங்கள் யாவும் தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpscexams.in-ல் வெளியிடப்பட்டுள்ளன. இது குறித்தான பின்D}ட்டத்தினை (FEEDBACK) அளிக்கவும் அந்த இணையதளத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே தேர்வாணையத்தில் நிரந்தரப்பதிவு எண்ணை (OTR) வைத்திருக்கும் தேர்வர்கள் தங்களது ஆதார் எண்ணைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்